# தவக்காலம் முதல் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இவ்வுலக ஆசைகளில் சிக்கிக் கொள்ளாமல் வாழவும், அலகையின் சோதனைக்கு ஆட்படாமல் நம்மை தப்புவிக்கவும், இறைவன் திருமுன் பணிவோம் என்பதை எடுத்துக் கூறும் தவக்காலம் முதல் ஞாயிறு திருப்பலி கொண்டாட்டத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இறைப்பாதையில் பயணிக்கும் போது பல்வேறு சோதனைகளும், தடைக்கற்களும் எதிர்ப்படவே செய்யும். இறைமகனுக்கே அலகை சவால் விடுத்தது என்றால் புல்லைப் போன்ற மனிதர்கள் நாம் எம்மாத்திரம்? எனவே பேராசையே சாவுக்கு அடிகோலும் என்பதை அறிந்து கொள்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில், நம் முதல் பெற்றோர் பாம்பினால் சோதிக்கப்பட்டதை தொடக்கநூல் வார்த்தைகள் எடுத்தியம்புகின்றது. அனைத்து வளங்களையும் இன்ப வனத்தில் அனுபவிக்க இறைவன் தந்தார். இதை விட பெரியது ஒன்று உள்ளது என்ற அலகையின் ஆசை வார்த்தைகளுக்கு ஏவாள் அடிபணிந்து பாவத்திற்கு வழியமைத்து விட்டாள். வஞ்சகம் வெற்றி பெற்றது. இக்காலத்திலும் வஞ்சகமும் பேராசையுமே பல்வேறு கலகங்களுக்கும் சாவுக்கும் காரணமாயுள்ளது. போதுமென்ற மனம் கொள்வோம். பரமனின் அன்பைப் பெறுவோம்.

இன்றைய நற்செய்தியில், இயேசு பாலைவனத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டதை மத்தேயு நற்செய்தி எடுத்துரைக்கின்றது. நாற்பது நாட்கள் நோன்பிருந்து, பாலைவன வெயிலில் வாடிய இயேசுவுக்கு அடிப்படை தேவையான உணவின் ஆசை, பின் உலக அரசு என சாத்தான் ஆசை காட்டுகிறது. இறை பயம் மறந்த ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். இறை துணையோடு இயேசு வெற்றி பெற்றார். சோதனைகளின் போது இறைவனையும் அவரது வார்த்தைகளையும் பற்றிக் கொண்டு ஒரு மனிதன் வழியாய் வந்த பாவத்தை, சாவினை இயேசு வெற்றி கொண்டதைப் போல நாமும் சோதனைகளை மேற்கொள்ள, இத்தவக்காலத்தில் ஜெபித்து பலியில் பங்கேற்போம்.

## மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. ஆண்டவர் ஒருவருக்கே பணி செய் என்றவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திரு அவைத் தலைவர், பணியாளர்கள் ஆண்டவருக்கு பணி செய்யவே வந்தோம் என்பதை முழுமனதோடு செய்யவும், ஆடம்பரமான, இவ்வுலக காரியங்களை கைக்கொள்ளாமல் நற்செய்திப் பணியால் சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. பாலைவனத்தை பசுமையாய் மாற்றுபவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள், அதிகாரிகள் நாட்டின் வளத்தன்மையை சிதைக்காமல், போராட்டத்தை தூண்டாமல், இயற்கையைச் சிதைத்து, பசுமையை பாலைவனம் ஆக்காமல், மக்களின் அமைதியுடன், மகிழ்வுடன் வாழ தேவையான திட்டங்களைத் தீட்டவும், பாகுபாடின்றி செயல்படுத்தவும் ஞானம் தர வே வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர் என்றவரே எம் இறைவா!

உணவு, பாதுகாப்பு மற்றும் தன் மதிப்புக்கான எங்கள் வாழ்க்கை தேடல்களில், அலகையின் வழியைத் தேர்ந்தெடுக்காமல், நீதி, நேர்மையோடு இறைவழியில் சாதிக்க வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. சாவை அகற்றி வாழ்வளிக்க வந்தவரே எம் இறைவா!

எம் பகுதியில் அறுவடை செய்யப்பட்ட தானியங்களுக்கு நல்ல விலை கிடைத்து, வேளாண் பொருளாதாரம் ஏற்றம் பெறவும், குடும்ப அமைதி, மகிழ்ச்சி பெருகவும், தேர்வைச் சந்திக்கும் மாணவர்கள் சிறந்த ஞானத்தோடு தேர்வு எழுதி வெற்றி பெறவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உம் அருளால் பெற்று மகிழவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com